# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 11/05/2022 | முதல் | 15/05/2022 |
| அறிக்கை எண் : | 037/ 2022 | வெளியீட்டு நாள் : | 10/05/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 39° - 41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27° - 29° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (06.05.2022 முதல் 09.05.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 15-05-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 06/05 | 07/05 | 08/05 | 09/05 | தேதி | நாள்-2 11/05 | நாள்-2 12/05 | நாள்-3 13/05 | நாள்-4 14/05 | நாள்-5 15/05 |
| 0.0 | 0.0 | 0.0 | 3.6 | மழை (மி.மீ) | 7 | 0 | 0 | 0 | 4 |
| 39 | 39 | 40 | 41 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 34 | 35 | 35 | 35 |
| 28 | 28 | 27 | 29 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 24 | 24 | 24 | 24 |
| 5 | 5 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 4 | 4 | 4 |
| 70 | 69 | 59 | 63 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 43 | 36 | 42 | 47 | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 4 | 7 | 6 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 8 | 8 | 8 |
| வட மேற்கு | வட கிழக்கு | வட மேற்கு | வட மேற்கு | **காற்றின் திசை** | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 11 மற்றும் 15 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°- 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## அடுத்த இரு வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (13- 19 மே 2022) :

### மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட குறைந்த அளவு மழைப் பொழிவு காணப்படும்.

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பாக காணப்படும். 20° செல்சியஸ் முதல் 26° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

வரும் 10.05.2022 மற்றும் 11.05.2022 தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும் படியும் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : மிளகாய், மக்காச்சோளம், கால்நடை.**

**மிளகாய்:**

- மிளகாய் பயிரில் விதை மூலம் பரவும் நுனிக்கருகல் நோய், பழம் அழுகல் நோய் கட்டுப்படுத்த
- ஒரு ஏக்கருக்கு தேவையான விதையில் 100 கிராம் ட்ரைகோடெர்மா விரிடி மற்றும் 100 கிராம் பேசலஸ் சப்டிலஸ் ஆகிய பூஞ்சாணக் கொல்லிகளை கலந்து ஒரு மணிநேரம் வைத்திருந்து விதைக்க வேண்டும்.

**மக்காச்சோளம்:**

- மக்காச்சோளப் பயிரில் படைப்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது.
- அறிகுறிகள்: புழுக்கள் இலையுறைக்கும், தண்டிற்கும் இடையே குடைந்து சென்று நடுக்குருத்தை தாக்குகிறது.
- இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சிப் பொறி வைக்க வேண்டும்.

**கால்நடை:**

- கோழிகளுக்கு பி- காம்ப்லெக்ஸ் திரவத்தினை குடி நீருடன் கலந்து அளிப்பதால் வெப்ப தாக்க அழற்சியை குறைக்கலாம்.